# ஆயிரக்கணக்கான தமிழர் தலைநகரை விட்டு மூட்டை முடிச்சுகளுடன் வெளியேறுகின்றனர்


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 சித்திரை 23 இதழ் 80

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 06 — 05 — 1993


(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமாவின் இறுதிக்கிரியைகளின்பின் தமிழர்கள் தாக்கப்படலாம் என்ற அச்சத்தைதொடர்ந்து பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொழும்பிலிருந்து வெளியேறியுள்ளதாகத் தெரிய வருகிறது.

தற்போதும் மூட்டை முடிச்சுகளுடனும், குடும்பத்துடனும் இவர்கள் வெளியேறிவருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(3ம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவை மாற்றி அமைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தெரிவின் பின் அமைச்சரவையும் மாற்றம் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வாரமளவில் புதிய ஜனாதிபதி பதவியேற்றதும் அவர் பிரதமர் உட்பட புதிய அமைச்சரவை ஒன்றையும் அமைப்பார்.

புதிய ஜனாதிபதி பதவி ஏற்கும் போது தற்போதுள்ள அமைச்சரவையின் பதவிக் காலம் ரத்தாகும் என்றும் அறிவிக்கப்படுகிறது. (ரி - கி)

● தென் பகுதியில்

# தமிழர் மீது தாக்குதல் நடத்த அமைச்சர் வீட்டில் திட்டம்!

## 'லக்திவ' பத்திரிகை அம்பலம்

(கொழும்பு)

கொழும்பிலும், தென் பகுதியிலும் தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடாத்துவதற்கு கொழும்பில் உள்ள அமைச்சர் ஒருவரின் வீட்டில் இரகசிய திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக 'லக்திவ' பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த திரு. தர்மசிறி காரியவசம் தெரிவித்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## தலைநகரில் பெரும் பதற்றம்

ஜனாதிபதியின் இறுதிக் கிரியையில் கலந்து கொள்ள நாட்டின் பல பகுதியிலுமிருந்து லட்சக் கணக்கில் சிங்கள மக்கள் தலைநகரினுள் வந்து குவிந்து கொண்டிருப்பதால் இவர்கள் தமிழருக்கு எதிராக தாக்குதலில் இறங்கலாம் என்ற அச்சம் படையினர் மத்தியில் எழுந்துள்ளது. இதனால் தமிழர் மத்தியில் பெரும் பதற்றமும், பீதியும் அதிகரித்து வருகிறது. இந்த பயப்பீதியை எதிர்க்கட்சி தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் உறுதிப்படுத்தியுள்ளார்.

## சிங்களவர் பலரும் கைது

தலைநகரில் தமிழருக்கு எதிராக கலவரத்தைத் தூண்டும் வகையில் நடந்து கொண்டதாக சிங்களவர் பலர் கடந்த இரு தினங்களில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மேலும் கிறிமினல் குற்றங்களில் ஈடுபட்ட சிங்களவர் பலரும் பொலிஸாரின் பலத்த கண்காணிப்பிற்குள் வைக்கப்பட்டுள்ளனர். கொழும்பில் சிங்களவர் பெருமளவில் வசிக்கும் பகுதிகளில் பொலிஸார் தீவிர கண்காணிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

## தகனத்தின் பின் தாக்குதல்

ஜனாதிபதியின் உடல் தகனம் நிறைவு பெற்றதும், தமிழர்கள் மீதும் அவர்கள் உடமைகள் மீதும் தாக்குதல் நடாத்த சில சிங்கள குழுக்கள் திட்டமிட்டிருப்பதாகவும் அது போல் ஒரு சம்பவம் நடந்தால் அது 1983 யூலை கலவரம் போன்றே பெரும் கலவரமாக மாறும் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார். அது போன்ற ஒரு சம்பவத்தை நடாத்தவும் அப்பாவி மக்களைத் தாக்கவும் சில தீய சக்திகள் முயற்சிப்பதாக அமைச்சர் சிறிசேன கூரேயும் எச்சரித்துள்ளார்.

## கொலைப் படை அச்சுறுத்தல்

கொழும்பிலும், நாட்டின் ஏனைய பகுதியிலும் தமிழ் மக்களுக்கு எதிராகத் தாக்குதல் நடாத்தப் பல பகுதிகளிலும் 'கொலைப் படைகள்' தயாராகி வருவதாக பொலிஸாருக்குத் தொலைபேசி மூலமும், நேரடியாகவும் பலர் எச்சரிக்கை விடுத்துள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கொழும்பைத் தவிரத் தென்பகுதியில் தமிழ் மக்கள் அதிகளவில் வசிக்கும் முக்கிய பல நகரங்களுக்கும் படையினர் அனுப்பப்பட்டு வருகிறார்களாம்.

## தமிழர் பகுதிக்கு பாதுகாப்பு

கொழும்பில் தமிழருக்கு எதிராக கலவரங்களும், வன்முறைகளும் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகரித்து வருவதையடுத்து, தமிழர் பெருமளவில் வாழும் பகுதிகளில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் படையினரின் ரோந்து நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டு, வீதித் தடைகளும், சோதனைகளும் போடப்பட்டுள்ளன. வீடுகளில் தங்கியிருக்கும் தமிழர்கள், வீடுகளிலேயே முடங்கிக் கிடப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(4ம் பக்கம் பார்க்க)

## 30,000 படையினர் தலைநகரில் குவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் இன்று நடைபெறும் ஜனாதிபதியின் இறுதிக் கிரியைகளை ஒட்டி சுமார் 30,000 படையினர் வரை தலைநகரில் குவிக்கப்பட்டுள்ளனராம்.

(4ம் பக்கம் பார்க்க)

## எதிரணி எம்.பி.க்களுக்கு பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சி எம். பிக்கள் மீதும் தாக்குதல் ஏதும் நடைபெறலாமெனக் கருதி அவர்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் அமைச்சர்களுக்கு கொலை மிரட்டல்

(கொழும்பு)

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் சில தமிழ்அமைச்சர்களுக்கு தொலைபேசி மூலம் கொலைப்பயமுறுத்தல்விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் புகார் தெரிவிக்கப்பட்டுள்

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞர் பெருமளவில் கைது

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பெருமளவு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வருவதாகத்

(4-ம் பக்கம் பார்க்க)

## ராஜிவ் கொலை விசாரணை நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

ராஜீவ்காந்தி கொலை வழக்கு விசாரணை நேற்று சென்னை அருகே பூந்தமல்லி சிறையிலுள்ள நீதிமன்றில் பலத்த பாதுகாப்புடன் ஆரம்பமானது.

இதன்போது அரசு தரப்பு வழக்கறிஞர் வழக்கின் [illegible] ரங்கனை நீதிபதி முன் எடுத்துரைத்தார்.

1981ம் ஆண்டு மே மாதம் 21ம் திகதி ஸ்ரீபெரம்புதூரில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் உரையாற்ற இருந்த போது ராஜீவ்காந்திவிடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டதாக அவர் கூறினார்.

புலிகளின் தலைவர் திரு.வே. பிரபாகரன், அதன் புலனாய்வு

(4ம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வியாழக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறுமென விடுதலைப்புலிகள் நிதித்துறை அறிவித்துள்ளது. (கி)

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள Sony T. V. K V 2060, National டெக் EN 7200 விற்பனைக்குண்டு. தொடர்பு;- கி. சந்திரசிவா, தெணியம்பை, வல்வெட்டித்துறை. (கி-78)

### ஆங்கில கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். 204, மானிப்பாய் ரோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (கி-86)


## மருந்துத் தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதார பிராந்தியத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் ஏற்பு தடுப்பு ஊசி மருந்துகளுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இவ்வாரம் பருத்தித்துறைக்கு வந்து சேரவிருக்கும் "குமண" கப்பலில் ஏற்பு தடுப்பு ஊசி மருந்துகள் உட்பட மருந்து வகைகள் யாழ். சுகாதார திணைக்களத்திற்கு கொண்டு வரப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. [72]

## இறுதிப் பரீட்சையில் சித்தி பெற்றோர்

(உடுவில்)

வட-இலங்கை தேசிய மருத்துவ சபையால் நடாத்தப்பட்ட சித்த ஆயுர்வேத இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம் பின்வருமாறு:-

செல்வி நந்தினிதேவி செல்லையா, செல்வி திரேசா அன்ரனிற்று ஜோசேப், திருமதி தனபாக்கியம் கணேசமூர்த்தி, செல்வி ராதா கந்தையா, செல்வி சந்திரமணி நல்லதம்பி நடராசா ஜெயராசா, செல்வி வளர்மதி வடிவேல், விநாயகமூர்த்தி தவகுமார், துரைலிங்கம், செல்வி இந்திராணி சந்தானந்தம், கே. நடராசா, எம். ஐ. ஆதம் லெவ்வை. (109)

## இராசி பலன்

06-05-1993

வியாழக்கிழமை

(தமிழுக்கு சித்திரை 23)

பூரண மு. ப. 9-48 வரை: சுவாதி காலை 6-29 வரை, அமிர்தசித்தயோகம் இராகு காலம் பகல் 1-26 முதல் 2-56 வரை சுபநேரம் காலை 6-26 முதல் 8-56 வரை

மேடம்: நண்பர்கள் சகவாசம், உல்லாச போக்கு, காரியசித்தி.

இடபம், பங்காளிகள் நன்மை கல்யாணம், கலந்துரையாடல்.

மிதுனம்: கடும் போக்கு, தொழில் சிக்கல், அதிக பேச்சு.

கடகம்: பணிபுரி வோர் பகை, மனவேதனை, தப்பபிப்பிராயம்.

சிங்கம்: எதிர்காலயோசனை பணப்புழக்கம், அறிஞர் உதவி

கன்னி: ஆசைக்கனவு, மனமாற்றம் தொழில் பிணக்கு.

துலாம்: தெய்வீக செலவு, குடும்ப மகிழ்ச்சி, பயணம்

விருச்சிகம்: பதற்றநிலை புத்திரர் செலவு, மாமியார் பகை.

தனுசு: சகோதர உதவி, மனச்சுமை, வெளியேற்றம்.

மகரம்: சுபகாரியம், இனசன மகிழ்ச்சி, தொழில் சிறப்பு.

கும்பம்: பகைவர் துன்பம், ஏமாற்றம், கருத்து மோதல்.

மீனம்: வீண்பகை, வெளியார் தலையீடு, அமைதிப்பு.

— ஜோஸ்யர்

## லலித் கொலை விசாரணையில் முக்கிய பல தகவல்கள்

(கொழும்பு)

லலித் அத்துலத்முதலி கொலைபற்றிய விசாரணையின் போது பல முக்கிய தகவல்கள் கிடைத்துள்ளதாக இரகசியப்பொலிஸ் பிரிவு அதிகாரி திரு. அமரதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் விசாரணைகள் முடிவடைந்ததும் தகவல்கள் வெளியாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## ராஜீவ் கொலை சந்தேகநபர் ஒருவர் கொழும்பில் கைது

(கொழும்பு)

இந்தியாவில் படுகொலை செய்யப்பட்ட ராஜீவ் காந்தியின் வழக்குத் தொடர்பாக 1991 ஜூலை முதல் 1993 மார்ச் வரை இந்திய பொலிசாரின் கட்டுப்பாட்டிலிருந்த இலங்கைத் தமிழ் போராளி அரியநாயகம் என்பவரை இலங்கை பொலிசார் கொழும்பில் கைது செய்துள்ளனர்.

இவர் இந்தியாவிலிருந்து தப்பிவந்தாரா அல்லது பிணையில் வந்தாரா என்பது குறித்து இலங்கை பொலிசார் ஆராய்ந்துவருகிறார்கள். (நி)

## பாலர் பாடசாலை ஆசிரியருக்கு டிப்ளோமா பயிற்சிநெறி ஆரம்பம்

(மானிப்பாய்)

பாலர்பாடசாலை ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பயிற்சி நெறியொன்று கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறியை ஜனாதிபதி நம்பிக்கை நிதியமும், திறந்த பல்கலைக்கழகமும் இணைந்து வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்திலுள்ள அரச சார்பற்ற தொண்டர் மற்றும் சமூக சேவை நிறுவனங்கள் மூலம் நடாத்தி வருகின்றன.

இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு தடவைக்கும் 80 பேர் தெரிவு செய்யப்பட்டு 40பேர் பொல்கொல்லை திறந்த பல்கலைக்கழகத்திலும் தற்போது பயிற்சி பெற்றுவருகின்றனர்.

இவர்கள் மே 19ந் திகதி வரை 1 மாத காலம் திறந்த பல்கலைக் கழகத்தில் பயிற்சி பெற்றபின்னர் இரண்டு ஆண்டு காலம் தொலைக்கல்வி முறையிலும் டிப்ளோமா பயிற்சியைப்பெறுவர். [71]

## கல்விப் பணிப்பாளருக்கு நாளை மணிவிழா

(யாழ்ப்பாணம்)

வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கத்தின் மணிவிழா நாளை 7ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணிக்கு இணுவில் கந்தசாமி கோவிலில் நடைபெறவுள்ளது.

விழாவுக்கு கலாநிதி சபா ஜெயராசா தலைமை வகிப்பார். சமயப்பெரியார்கள், அறிஞர்களின் ஆசியுரைகளும் பாராட்டுகளும் கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறும்.

இணுவில் சிவகாமி அம்மன் கோவிலில் இருந்து பிற்பகல் 4 மணிக்கு ஊர்வலம் ஆரம்பமாகும். (சு-109

## போக்குவரத்து சேவை

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணிக்கும் பருத்தித்துறைக்குமிடையிலான போக்குவரத்துச் சேவையொன்று அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. மருதங்கேணி பதில் பிரதேசச் செயலர் திரு பு சுந்தரம்பிள்ளை இதனை ஆரம்பித்துவைத்தார்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பிற்பகல் 1-30 மணிக்கு மருதங்கேணியிலிருந்து புறப்படும் வாகனம் பருத்தித்துறைக்கும் ஒவ்வொரு திங்கட்கிழமை காலை 7-00 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து புறப்பட்டு மருதங்கேணிக்கும் இடையில் சேவையிலீடுபடும். (161)

## ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்பரப்பிலிருந்து கடந்த சனியிரவு 9 மணியளவில் பொன்னாலைப் பகுதியை நோக்கி ஷெல்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது.

ஐந்துக்கு மேற்பட்ட குண்டுகள் பொன்னாலை கடற்கரைப் பிரதேசத்தில் வீழ்ந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (59)

## 'சாளரம்' வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

'சாளரம்' மே ஜூன் இளையோர் திங்கள் இதழ் வெளிவந்துள்ளது. இவ்விதழில் பனை வெல்லம் பயன் சொல்லும், இயலிசை வாரிதி திரு. ந. வீரமணி ஐயருடன் சந்திப்பு, சிறுவர் மீதான பாலியல் வன்முறை, பகலவன் பதில்கள், எங்கும் ஆண் மேலாதிக்கம், தமிழீழ விடுதலைப் போராட்டமும் தமிழ் வீடியோ திரைப்படங்களும், விளையாட்டு, உலகின் தலைசிறந்த பாடசாலைகள், சிறுகதை, மொன்றோ கோட்பாடு குழந்தையும் முதல் ஆண்டு உணவும், வடமராட்சி கிழக்கில் வளராத கல்வி நிலை, போன்ற விடயங்கள் வெளிவந்துள்ளன. -ரி

## இன்று

(யாழ்ப்பாணம்)

பாரதி கல்விக் கழகம் வெளியிடும் "மழலைத் தமிழ் அமுதம்" நூல் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் சன்மார்க்க வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது (சு

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக புறநிலைப்படிப்புகள் அலகு வழங்கும் சுகவாழ்வு விரிவுரைத் தொடரின் 5வது அமர்வு இன்று காலை 9-00 மணி முதல் 12-00 மணிவரை கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இன்று விசர்நாய்க்கடி மலேரியா எனும் பொருளில் கலாநிதி திருமதி வி. எம். கருணாரனும் ஆரம்ப சுகாதார பராமரிப்பும் தொண்டர்களும் என்ற தலைப்பில் வைத்திய கலாநிதி நச்சினார்க்கினியனும் விரிவுரை நிகழ்த்தவுள்ளனர். (159)

## போயஸ் காடினை விமானம் பறக்கமுடியாத பகுதியாக்கவேண்டும்

(சென்னை)

தனது இல்லம் உள்ள பகுதியான போயஸ் காடினை விமானம் பறக்கக் கூடாத பகுதியென அறிவிக்க வேண்டுமென தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா மத்திய அரசைக் கேட்டுள்ளார்.

மேலும் ஆகாய கண்காணிப்பு மையமொன்றை தமது இல்லத்தில் அமைக்க வேண்டுமெனவும் அவர் மத்திய அரசிடம் கோரியுள்ளார்.

செல்வி ஜெயலலிதாவின் இக்கோரிக்கை குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமென மத்திய அரசு செல்வி ஜெயலலிதாவிற்கு உறுதியளித்துள்ளது. (நி)

## சைக்கிள் திருட்டு

(கொழும்புத்துறை)

கோப்புரம் கிழக்கு ஸ்ரீமடத்துப்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த க. மகாலிங்கத்தின் றலி சைக்கிள் அண்மையில் மூளாய் செம்பாட்டான் தோட்டத்தில் வைத்துக் களவாடப்பட்டுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் பற்றித் தமிழீழக் காவல்துறையினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (154)

## இலட்சார்ச்சனை

(யாழ்ம்பாணம்)

தெல்லிமாநகர் காசிவிநாயகருக்கு இலட்சார்ச்சனை நாளை 7ம், 8ம், 9ம் தேதிகளில் நடைபெறும்.

## திருட்டு

(கொழும்புத்துறை)

யாழ். நாச்சிமார் கோவிலடி ச. நந்தகோபாலின் வீட்டில் ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் திருடப்பட்டுள்ளது. 154


## மொழி பெயர்ப்பாளர்கள் தேவை

ஆங்கில நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்க வல்லவர்கள் விண்ணப்பிக்கவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

இல. 89 C/o ஈழநாடு யாழ்ப்பாணம்.

(கி-89)

வடமாநிலக் கல்விப்பணிப்பாளர்

உயர்திரு

## இரா. சுந்தரலிங்கம்

அவர்களுக்கு

## "மணி விழா"

ooooooooooooooooo

காலம்: 1993-05-07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

நேரம்: பிற்பகல் 5-30 மணி

இடம்: இணுவில் கந்தசுவாமி கோவில்

தலைவர்: கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள்

சமயப்பெரியார்கள், அறிஞர்கள், கல்விமான்கள் ஆகியோரின் ஆசியுரைகளும், பாராட்டுரைகளும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில்.
1993-05-07.

செ. சோதிப்பெருமாள்
செயலாளர்
விழாக்குழுவினர் சார்பாக

குறிப்பு:- பிற்பகல் 4-00மணிக்கு ஊர்வலம் இணுவில் சிவகாமி அம்மன் கோவிலில் இருந்து ஆரம்பமாகும். (சி-88)

சன்மார்க்க சபை குரும்பசிட்டி

"ஈழகேசரி" நா. பொன்னையா

## 42-ம் நினைவு தினம்

இடம்:- கம்பன் கோட்டம் நல்லூர்

காலம்:- 09-05-1993 ஞாயிறு காலை 9 மணி

நினைவுப் பேருரை:-
"ஈழகேசரியும் குழந்தை இலக்கியமும்"
திரு. எஸ். சிவலிங்கராஜா எம். ஏ.
(சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

நூல் வெளியீடு:-
இரசிகமணியின் சிறுவர் கவிநயம்.

தலைமை:- கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை

வெளியீட்டுரை:- கவிஞர் புதுவை இரத்தினதுரை

ஆய்வுரை:- கவிஞர் கல்வயல் குமாரசாமி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சி. கௌரிபாலன், ச. பழனிவேல்,
இணைச் செயலாளர்கள்

(சி 87)

# முப்படை தளபதிகளுடன் பதில் ஜனாதிபதி சந்திப்பு

## தலைநகர் பாதுகாப்பிற்கு பெரும் படை குவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து பதில் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க முப்படைத் தளபதிகளையும் அழைத்து அவசர மாநாடு கூட்டியுள்ளார்.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும், தென்பகுதியின் ஏனைய இடங்களிலும் ஜனாதிபதி பிரேமதாஸாவின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெறும்போது பெரும் கலவரம் வெடிக்கலாமென அஞ்சப்படுவதையடுத்தே பதில் ஜனாதிபதி இந்த அவசர மாநாட்டை நேற்று முன்தினம் பாதுகாப்பு அமைச்சின் செயலகத்தில் கூட்டினார்.

இம் மாநாட்டில் முப்படைத் தளபதிகளும் பாதுகாப்பு அமைச்சின் செயலர் மற்றும் முப்படை உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

வன்முறைகள், கலவரங்களை தடுக்கும் முன்னேற்பாடுமுறைகள் குறித்தும் இங்கு விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இந்த பாதுகாப்பு ஏற்பாடுகளில் மாவட்ட அரசாங்க அதிபர்களும், படை அதிகாரிகளும் இணைந்து செயற்படுவார்கள் எனவும் கலவரங்களை தடுக்கும் முகமாக இரகசிய பொலிஸார் சிவில் உடைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### படைகள் குவிப்பு

இதேவேளை கொழும்பு நகரினதும் சுற்றுப்புறங்களினதும் பாதுகாப்பு கருதி வடக்கு கிழக்கிலிருந்து மேலதிகமாக பெருமளவு படைகள் தலைநகரில் குவிக்கப்பட்டு வருகிறது.

முன்பு எதிர்பார்க்கப்பட்ட அளவிலும் பெருமளவில் படையினர் தலைநகருக்கு வரவழைக்கப்பட்டுள்ளதுடன் முக்கிய வீதிகள் எங்கும் வீதித்தடைகள் போடப்பட்டு பலத்த சோதனைகள் நடாத்தப்பட்டு வருகிறது.

தலைநகரினுள் பிரவேசிக்கும் சகல வாகனங்களும் மிகத் தீவிரமாக சோதனையிடப்பட்டு வருகின்றன. சந்தேகத்திற்கிடமான வாகனங்கள் தடுத்து நிறுத்தப்படுகின்றன.

இதற்கிடையில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஏயர் வைஷ்மாஷல் வோல்டர் பெர்ணாண்டோவுடன் மட்டு மாவட்ட எம்.பி. திரு ஜோசப் பரராஜசிங்கம் கொழும்பிலுள்ள தமிழர்களின் பாதுகாப்பு குறித்து ஆலோசனை நடாத்தியுள்ளார்.

கொழும்பில் எத்தகைய அசம்பாவிதங்களும் நடைபெறுதெனவும் அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெறுமென சந்தேகித்தால் உடனடியாக அறிவிக்குமாறும் ஏயர்வைஷ் மாஷல் வோல்டர் பெர்ணாண்டோ மட்டு எம்பியிடம் கூறியுள்ளார். —சி

## ஐ. தே. க. ஆதரவாளர்கள் தலைநகருக்கு படையெடுப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாஸாவின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ளவென நேற்று முதல் தென்பகுதியின் பல இடங்களிலிருந்தும் இலட்சக்கணக்கான ஐ. தே. க. ஆதரவாளர்கள் கொழும்பு நோக்கி படையெடுத்த வண்ணமிருந்தனர்.

பல இடங்களிலிருந்து இறுதிச்சடங்கில் கலந்து கொள்ளும் ஐ. தே. க. ஆதரவாளர்கள் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சநிலை கொழும்பிலுள்ள தமிழர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை தென்பகுதியிலுள்ள முக்கியமான வீதிகள், சந்திகள் தோறும் ஜனாதிபதி பிரேமாவின் மறைவுக்கு அஞ்சலி தெரிவித்து பெரியளவிலான பதாகைகளும், சுலோகங்களும் பிரேமாவின் படத்துடன் கட்டப்பட்டுள்ளன.

புத்தளம், இரத்தினபுரி, நீர்கொழும்பு, கண்டி, சிலாபம், அனுராதபுரம், மாத்தறை, குருநாகல், பொலநறுவ உட்பட சிங்களப்பகுதிகள் எங்கும் ஒரே சோகமயமாக காட்சியளிக்கின்றன.

பொதுமக்கள் பிரேமாவின் இறுதிச்சடங்கில் கலந்து கொள்வதற்கு ஏற்றவகையில் சகல இடங்களுக்குமான அனைத்துப் போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

## பாதுகாப்பு கருதியே விடுமுறை அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டே நாளை வெள்ளிக்கிழமையும் அரசாங்க, வங்கி, விடுமுறையாக அரசு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இன்று வியாழக்கிழமை ஜனாதிபதியின் இறுதிக்கிரியைகள் நடைபெறுகின்றன. இதில் அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படும் வாய்ப்பிருப்பதால் அடுத்தடுத்த நாட்கள் பாதிப்பு ஏற்படலாமென கருதியே இந்த லீவு அறிவிக்கப்பட்டுள்ளதாம். (சி)

## சோதிடர் கூற்றை மீறியதால் பிரேமா கொல்லப்பட்டார்

(கொழும்பு)

ஏப்ரல் 14 முதல் ஜூன் மாதம் முடியும் வரைக்கும் ஜனாதிபதி பிரேமதாஸா பொதுக்கூட்டங்களையும் பயணங்களையும் தவிர்க்க வேண்டும் என்று சோதிடர் குணசேரா ஜனாதிபதிக்கு எச்சரிக்கை செய்தாராம்.

சோதிடத்தில் அதீத நம்பிக்கையுடைய ஜனாதிபதி பிரேமதாஸா சோதிடர் குணசேகராவை தனது வீட்டிலே வைத்திருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தாம் கூறியதை மீறி செயற்பட்டமையாலே ஜனாதிபதி பிரேமதாஸா இறக்கவேண்டி வந்தது என்று அந்தச் சோதிடர் தெரிவித்துள்ளார். (வி)

### பிரேமாவை கொலை செய்ய

## ஆமர்வீதிவீடொன்றிலிருந்து குண்டு எடுத்து வரப்பட்டதாம்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவை கொலை செய்த பாரியகுண்டு ஆமர் வீதி வீடொன்றில் கொலையாளியின் உடம்பில் வைத்து கட்டப்பட்டிருக்கலாம் என்று பொலிசார் சந்தேகின்றனர்.

இந்தக் குண்டை குறைந்தது இரண்டு பேராவது கொலையாளியின் உடம்பில் வைத்துக் கட்டியிருக்கலாம் எனவும் இக்குண்டு தட்டையானதாக இருக்கலாமென்றும் பொலிசார் தெரிவித்தனர்.

ஆமர் வீதியில் ஒரு வீட்டில் தான் இந்த குண்டு கட்டப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதால் அப்பகுதியிலுள்ள வீடுகளில் விசாரணைகள் நடத்தப்பட்டுகின்றன.

இப்படுகொலை தொடர்பாக ஆமர் வீதி, குணசிங்கபுரம், கொலவத்தை ஆகிய பகுதிகளில் சுமார் 200 பேர் வரை விசாரிக்கப்பட்டுள்ளனர்.

கொலையாளி தட்டையான குண்டை தமது உடம்பில் கட்டிய பின்னர் அதற்கு மேலால் இன்னுமொரு பச்சை சேட் ஒன்றை அணிந்திருந்தார் என்றும் அதற்கு மேலாக இன்னுமொரு பச்சை சால்வை கழுத்தில் போட்டிருந்தார் என்றும் தெரியவந்துள்ளது.

கொலையாளி இந்தகுண்டை கமக்கட்டினுள் நசுக்கித்தான் வெடிக்கச் செய்திருக்கலாம் என்றும் பொலிசார் நம்புகின்றனர். (வி)

## தமிழர் பாதுகாப்பு குறித்து அமைச்சர் செல்லச்சாமி ஜனாதிபதியுடன் பேச்சு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள தமிழர்களின் பாதுகாப்பு குறித்து இராஜாங்க அமைச்சர் எம். எஸ் செல்லச்சாமி பதில் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இச்சந்திப்பு தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் மக்கள் எத்தகைய அச்சமும் பயமும் கொள்ளத் தேவையில்லை. கொழும்பில் நிலவும் பதற்றநிலை குறித்து பதில் ஜனாதிபதியை நான் நேரில் சந்தித்து பேசினேன். அவர் தமிழ் மக்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படும் என்றும் உறுதியளித்துள்ளார்.

தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு பதில் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா உத்தரவாதமளித்துள்ளார். ஜனாதிபதி பிரேமதாஸாவின் அகால மரணத்தைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை சில சமூக விரோத சக்திகள் சாதகமாக்கிக்கொண்டு கொழும்பிலும் பிற இடங்களிலும் வீண் பீதிகளை ஏற்படுத்தி வருவதாக எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வி)

## கொழும்பு லொட்ஜ்களில் இருபது தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

கொழும்பிலுள்ள லொட்ஜ்களிலிருந்து இருபதிற்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இந்த இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

ஜனாதிபதி பிரேமா கொலை தொடர்பாகவே இவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வி)

## ஆயிரக்கணக்கான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை தமது சொந்த தேவைகளின் பொருட்டு கொழும்பு சென்று தனியார் விடுதிகளிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியிருந்த தமிழர்களில் பலர் அவசர அவசரமாக கொழும்பைவிட்டு தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாக தெரியவருகிறது.

யாழ்ப்பாணம் நோக்கி வந்த பலர் வவுனியா, கிளிநொச்சிப் பகுதிகளில் தரித்து நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் தற்போது தங்கியுள்ள தமிழர்கள் பலர் அச்சமும், பீதியுமடைந்த நிலையில் தமது இல்லங்களிலே தங்கியிருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பிற்கு பரீட்சைகள் எழுதச் சென்ற மாணவர்களும் திரும்பியுள்ளனர். இவர்கள் கிளிநொச்சி வவுனியா போன்ற இடங்களில் தற்போது தரித்து நிற்கிறார்கள்.

இவர்களில் பலர் தனியார் வாகனங்களில் கையில் கிடைத்த பொருட்களுடன் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இதேவேளை தென்பகுதியிலுள்ள தமிழருக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்ட நிலையில் இருப்பதாக தெரியவருகிறது.

கொழும்பில் தமிழர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என்று ஜனாதிபதி அறிவித்திருந்த போதிலும், முப்படையினரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ள போதிலும் இவர்கள் அச்சமடைந்த நிலையிலே காணப்படுகிறார்கள். (வி)

## கேள்விக்குறியான நிலையில் ஜெயலலிதாவின் ஆட்சி

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் எதிர்காலம் அவருக்கு ஒரு சோதனையான காலமாகும் என்று பி. பி. ஸி. செய்தியாளர் திரு. சாம் ராஜப்பா தெரிவித்துள்ளார்.

செல்வி ஜெயலலிதாவிற்கு எதிராக எதிர்க்கட்சிகள் தொடுத்துள்ள வழக்குகளையும் எதிர்ப்புகளையும் அவர் எதிர்காலத்தில் எப்படிச் சமாளிக்கப்போகின்றார் என்ற கேள்விக்குறியில் இருக்கிறார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

திரு. சாம்ராஜப்பா மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது;

செல்வி ஜெயலலிதா முதலமைச்சர் பதவியேற்ற இரண்டாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவாரா? என்ற நிலை ஏற்பட்டது. ஆனால் அவர் முதல்வர் பதவி ஏற்றபோது அவரை யாலும் நூறாண்டுக்கு அசைக்கமுடியாது என்றும் கருதப்பட்டது.

ஜெயலலிதா பல வழக்குகள் தொடர்பான சட்டப்போரில் ஈடுபட்டிருப்பதால் முதல் அமைச்சர் பதவியை தக்க வைத்திருப்பாரா என்று பலரால் சந்தேகிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாயன்று உயர் நீதிமன்றம் அ. தி. மு. க. ஆட்சியை வன்மையாக கண்டித்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் தி.மு. கழக தமிழக அரசு மீது 18 குற்றச்சாட்டுகள் அடங்கிய மனு ஒன்று ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இதேவேளை டாக்டர் சுப்பிரமணிய சுவாமியும் செல்வி ஜெயலலிதா மீது ஊழல் குற்றச்சாட்டு பட்டியலை சமர்ப்பித்து வழக்கு தொடுக்க அனுமதி கோரியிருந்தார்.

இவை தவிர இந்திராகாங்கிரஸ் கட்சியும் நீண்ட ஊழல் குற்றச்சாட்டு பட்டியல் ஒன்றை தயாரித்து வருகிறது. இதை சமர்ப்பிப்பதோடு அ. தி. மு. க. அரசை கலைக்கும் படியும் கோரவுள்ளது

மேலும் செல்வி ஜெயலலிதா சொத்துவரி கட்டுபவர் வரிசையில் இல்லாதவர் ஆனால் அண்மையில் அவர் கொடுத்த பட்டி

(4-ம் பக்கம் பார்க்க)

# சரணடையத் தயாராம் வீரப்பன் அறிவிப்பு

## சந்தன மரக் கடத்தல்

(சென்னை)

தமிழகத்தில் சந்தன மரக் கடத்தல் மன்னன் தான் பொலிஸாரிடம் சரணடைய தயாராயிருப்பதாக அறிவித்துள்ளதாக 'நக்கீரன்' பத்திரிகை கூறியுள்ளது.

தமக்கு குறைவான தண்டனையை தர அரசு தயாரானாலும், தம்மை சிறையில் பொலிஸார் முறையாக நடாத்த முன்வந்தாலும் தாம் சரணடைய தயார் என வீரப்பன் கூறியுள்ளார்.

இதுவரை வீரப்பன் கோஷ்டி 80ற்கும் மேற்பட்ட பொலிஸாரையும் காட்டு இலாகா அதிகாரிகளையும் கொன்றிருப்பதாக பொலிசார் கூறியுள்ளனர்.

வீரப்பனைப் பிடிக்க உதவுபவர் 50 லட்சம் ரூபா சன்மானம் தரப்படுமென தமிழக சர்வாதிகார அரசு அறிவித்திருப்பதும் தெரிந்ததே. (இ)

# 'அத்த' கார்ட்டூனிஸ்ட் தாக்குதல் சந்தேகநபர் சுடப்பட்டார்

(கொழும்பு)

'அத்த' பத்திரிகையின் கார்ட்டூனிஸ்ற், முகமது யூனுஸ் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் சந்தேக நபர் ஒருவர் இனம் தெரியாதோரால் சுடப்பட்டார்.

படுகாயமடைந்த நிலையில் இவர் தற்போது கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பொரலை கோதமி வீதியில் வைத்து இவர் சுடப்பட்டார். (இ)

# ஜனாதிபதியின் பூதவுடல் இன்று தகனம் செய்யப்படும்

(கொழும்பு)

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதி ஊர்வலம் இன்று காலை 11-00 மணிக்கு ஜனாதிபதி மாளிகையிலிருந்து ஆரம்பமாகும்.

இந்த ஊர்வலம் சுமார் 4 மணித்தியாலங்கள் எடுக்கும் என்றும் ஊர்வலம் செல்லும் ரோட்டுகளில் வாகனப் போக்கு வரத்து இருக்காது எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி பிரேமதாசாவின் பூதவுடலை தாங்கிவரும் பேழையை அலெக்சாந்திர பிளேக் ஆயுதப் படையினர் பொறுப்பேற்பர். அங்கிருந்து பீரங்கி வண்டியில் பேழை வைக்கப்பட்டு சுதந்திர சதுக்கம் வரை சகல இராணுவ மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்படும். அங்கு சமயக் கிரியைகளும், இரங்கல் உரைகளும் முடிவுற்ற பின்னர், மாலை 5-00 மணியளவில் பூதவுடல் தகனம் செய்யப்படும். [கே-சி]

## வாதுவ வந்தது

(நெல்லியடி)

திருமலையிலிருந்து புறப்பட்ட, வாதுவ கப்பல் நேற்றுக்காலை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்துசேர்ந்தது.

2700 மெ. தொன் மாவுடன் வந்த இக்கப்பலில், யாழ். மாவட்ட இலங்கை வங்கிக்கும் 40 மில்லியன் ரூபா பணமும் வந்துள்ளது. மா. இறக்கும் பணி இன்று காலையில் ஆரம்பமாகும். (160-இ)

## கேள்விக்குறியான

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யலில் 6 கோடி சொத்து உள்ளதாக தெரிவித்தபடியால் திடீரென இச்சொத்து எப்படி வந்தது என வருமானவரி இலாகா கேள்வி எழுப்பியுள்ளது.

இன்னும் டாக்டர் சுப்பிரமணியசுவாமி போட்ட மான நஷ்ட வழக்கையும் செல்வி ஜெயலலிதா எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்றும் பி.டி.ஸி. நிருபர் மேலும் தெரிவித்துள்ளார். (கே-சி)

# தி. மு. க. உறுப்பினரை கைதுசெய்ய தடை உத்தரவு

(சென்னை)

தி. மு. க. மேடைப் பேச்சாளர் திரு. வெற்றிகொண்டானை கைது செய்வதற்கு தமிழக சட்டப் பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா விடுத்த கைது வாரண்டுக்கு சென்னை உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

சட்டப் பேரவைத் தலைவரைப் பற்றியும், பெண் உறுப்பினர் ஒருவர் பற்றியும் திரு. வெற்றிகொண்டான் அவதூறாக மேடையில் பேசியதை அடுத்து, பேரவை ஒப்புதலுடன் திரு. சேடப்பட்டி முத்தையா கைது வாரண்டு பிறப்பித்திருந்தார். (கே-சி)

## எதிரணி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் மரணத்தைச் சாட்டாக வைத்து அவருக்கு எதிராக தீவிரமாக செயற்பட்டு வந்த எதிர்க்கட்சி எம். பிக்களின் பாதுகாப்பே பலப்படுத்தப் பட்டுள்ளதுடன் அவர்கள் வீடுகளுக்கும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# சைக்கிள் திருடர் கைது

(யாழ்ப்பாணம்)

பல சைக்கிள்களை திருடிய இருவர் தமிழீழ காவல் துறையினரிடம் சிக்கியுள்ளனர். (56)

## தமிழ் இளைஞர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பின் புறநகர்ப் பகுதியில், நேற்றுக் காலை 30 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் தமிழ் இளைஞர்களைத் தேடிப் பிடிக்கும் நடவடிக்கையில், படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக "இந்திய வானொலி" தெரிவித்தது. (இ)

## 30,000 படையினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முப்படைகளுமென இவர்கள் குவிக்கப்பட்டு தீவிர காவலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கான அறிவுறுத்தல்கள் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறதாம்.

கனத்தை மயானத்தை சுற்றி 5.000 படையினர் வரை நிறுத்தப்பட்டுள்ளார்கள். (இ)

## தமிழ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வது.

கடந்த ஓரிரு தினங்களில் தங்களுக்கு நான்கு ஐந்து முறை இவ்வாறு கொலை மிரட்டல் வந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

லலித் இறுதி ஊர்வலத்தின் போது அமைச்சர் தொண்டமானின் வீடு தாக்குதலுக்கு இலக்கானதும் தெரிந்ததே. (இ)

## ராஜீவ் கொலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவின் தலைவர் பொட்டு அம்மான், மகளிர் பிரிவுத் தலைவி அகிலா ஆகியோர் திரு. ராஜீவைக் கொலை செய்ய திட்டமிட்டதாகவும் அவர் கூறினார்.

இலங்கையின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க ராஜீவ் உறுதி பூண்டதாகவும் இலங்கை இனப் பிரச்னைக்குத் தீர்வுகாண 1987-ல் இலங்கை-இந்திய ஒப்பந்தம் அரசால் உருவாக்கப்பட்டதையும் சகித்துக்கொள்ளாத புலிகள், ராஜீவ் மீது ஆத்திரமடைந்ததாகவும், இதுவே கொலைக்குக் காரணமெனவும் விபரித்தார்.

இத்திட்டதை நிறைவேற்ற புலிகள் சென்னையிலும், இதர பகுதிகளிலும் தங்கியிருந்தார்கள். இந்த இயக்கத்தின் மீது அனுதாபம் கொண்ட சிலரையும், அவர்கள் பயன்படுத்திக் கொண்டதாகவும் கூறினார்.

இவ் விசாரணையின்போது வழக்கில் சம்பந்தப்பட்டதாக கூறப்படும் 26 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். விசேட நீதிமன்றின் நீதிபதி, வழக்கறிஞரின் வாதங்களைக் கேட்டபின் இம் மாதம் 12ம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

இந்த விசேட நீதிமன்றத்தினுள் பத்திரிகையாளர்கள் எவரும் உட்செல்ல அனுமதிக்கப்படவில்லை.

## தென்பகுதியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறுகையில்: ஜனாதிபதியின் கொலையை அடுத்து அவர் கொல்லப்பட்ட அன்றும் அதற்கு பின்பும் கொழும்பு வீதிகளில் நடமாடும் தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடாத்தவும் திட்டம் தீட்டப்பட்டு முயற்சிகள் நடந்துள்ளது.

இவ்வாறான ஒரு தாக்குதல் மூலம் இனக்கலவரம் ஒன்றை ஏற்படுத்த முயற்சிகள் நடைபெறுவதாகவும் கூறினார்.

மேலும் கடந்த திங்கட்கிழமை பம்பலப்பிட்டிப் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் வீரசிங்க மீதும், உப-தலைவர் சிசில் கருணாதிலகா மீதும் தாக்குதல் நடாத்தப் பட்டுள்ளது. ஜனாதிபதியின் இறுதி கிரியைகள் நடக்க முன்பே 'ரூபவாஹினிப்' மாகாணசபைத் தேர்தல் பற்றி பிரசாரம் செய்வது வெட்கக்கேடாக இருக்கின்றது. இப்படியான சம்பவங்கள் அத்துலத்முதலி, பிரேமதாச ஆகியோர் இறந்த பின்பு தான் நடக்கின்றன என்றும் கூறினார். (சு-சி)

## தலைநகரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

# பத்திரிகைகளுக்கு மிரட்டல்

ஜனாதிபதியின் இறுதிக் கிரியைகள் முடிவடைந்ததும், தமிழ், சிங்களப் பத்திரிகைக் காரியாலயங்கள் மீதும் தாக்குதல் நடாத்தத் திட்டம் தீட்டப்பட்டுள்ளதாம். ஜனாதிபதிக்கு எதிராகச் செய்திகளையும், கட்டுரைகளையும் வெளியிட்டு வந்த பத்திரிகைக் காரியாலயங்கள் மீதே தாக்குதல் நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக பதில் ஜனாதிபதிக்குக் கிடைத்தபுகார்களையடுத்து இக்காரியாலயங்களுக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டவர்க்கு பாதுகாப்பு

ஜனாதிபதியின் இறுதிக் கிரியையில் கலந்து கொள்ள இன்று கொழும்பு வரும் வெளிநாட்டு தலைவர்களின் பாதுகாப்பு கருதி ஆயிரக்கணக்கில் பாதுகாப்பு படையினர் கொழும்பில் குவிக்கப்பட்டுள்ளனர். வெளிநாட்டு தலைவர்கள் வந்து தங்கியிருக்கும் ஹோட்டல்களை சுற்றியும் நூற்றுக்கணக்கில் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். ஹோட்டல்களுக்கு வரும் பயணிகளும், வாகனங்களும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

# அமைதி காக்க 'கூரே' வேண்டுகோள்

வன்செயல்களில் ஈடுபடுவதற்குச் சில குழுக்கள் திட்டமிட்டுள்ளன. இவ்வாறு அமைச்சர் 'கூரே' கூறினார். அவர் மேலும் கூறுகையில்: அகிம்சை வழியில் சிந்திக்கும் மக்களை, வன்செயலில் இறங்குவதற்கு இக்குழுக்கள் உற்சாகப்படுத்தி வருகின்றன. உலகத் தலைவர்கள் எம் மத்தியில் இருக்கும் இவ்வேளையில், இந்த முயற்சிகள் நடைபெறுவதைக் கண்டு வேதனை அடைகின்றேன். பொதுமக்கள் வதந்திகளை நம்பாது அமைதியாக இருக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# லலித் ஆதரவாளர்களுக்கு மிரட்டல்

லலித் கொலையை கண்டித்து அவருக்கு அஞ்சலி செலுத்தியோருக்கும், அவரது மறைவையொட்டி புகைப்படங்களை தொங்கவிட்ட நிறுவனங்கள், கடைகள், ஸ்தாபனங்கள் மீதும் தாக்குதல் நடந்தால் ஆளும் கட்சி, எதிர்கட்சி ஆதரவாளர்கள் மத்தியிலும் பெரும் மோதல்கள் இடம் பெறலாமெனவும் பொலிசார் அச்சம் தெரிவித்துள்ளனர்.

# வதந்திகளை நம்பவேண்டாம் — பதில் ஜனாதிபதி

ஜனாதிபதி பிரேமதாசவை கொன்றவர் யார் எவர் என்ற விசாரணை முடிய முன்னர், வதந்திகளை பரப்புவது பொறுப்பற்ற செயலாகும் என பதில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கூறியுள்ளார். இந்தப் படுகொலை பற்றிய தீவிர விசாரணை நடந்து கொண்டு இருப்பதாகவும், தேவையற்ற வதந்திகளைப் பரப்பவேண்டாமெனவும் பி. பி. ஸி.க்கு வழங்கிய பேட்டியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இனம்தெரியாத சடலம் மீட்பு

ஜனாதிபதியின் கொலையை அடுத்து திம்பிரிகஸ்யாய என்ற இடத்தில் சுதந்திரக் கட்சியை சேர்ந்த செல்வி மங்கள ஜயவிக்கிரம என்பவர் பலமாக தாக்கப்பட்டதுடன் அவரது தலைமயிரும் வெட்டப்பட்டுள்ளது. இதேவேளை மாத்தறையில் இனந்தெரியாத ஒருவரின் சடலமும் மீட்கப்பட்டுள்ளது. மேலும் வீட்டுக்காரருக்கு தெரியாமல் பல வீடுகளிலும் இரவிரவாக வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்டுள்ளனவாம்.

# வெடி கொளுத்தியோர் மீது தாக்கு

ஜனாதிபதி பிரேமதாஸா கொலையுண்ட செய்தி கேள்வியுற்று வெடிகள் கொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்த தென்னிலங்கைச் சிங்களவர் பலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுப் பலத்த தாக்குதலுக்குள்ளானதாக 'லக்திவ' பத்திரிகை தெரிவித்துள்ளது. தெற்கில் காலி, மாத்தறை, தங்காலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே அடையாளம் காணப்பட்டு பிடிக்கப்பட்டு பொலிஸாரால் தாக்கப்பட்டதாகவும் அச்செய்தி தெரிவித்துள்ளது.

# வதந்தி என்கிறார் தொண்டமான்

நாட்டின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துவதற்காகச் சிலர் வதந்திகளையும், பீதிகளையும் பரப்பி வருகின்றனர். ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதிக் கிரியையின் பின் கலவரம் ஏற்படுத்தத் தீயசக்திகளே முயற்சிக்கின்றன. இவ்வாறு அமைச்சர் தொண்டமான் பி. பி. ஸிக்கு தெரிவித்தார். பல பாகங்களிலிருந்தும் மக்கள் தலைநகருக்கு வந்து கொண்டு இருக்கிறார்கள். வந்தவர்களும் திரும்பிச் சென்று கொண்டு இருக்கிறார்கள். ஆயிரம் பேர் வருவார்கள், ஆயிரம் பேர் போவார்கள். ஆகவே, பீதி கொள்ளவோ அச்சமடையவோ தேவையில்லை. சில தமிழர்கள் அச்சம் காரணமாகவே தலைநகரை விட்டு செல்கின்றனர்; ஆனால் அப்படி ஒன்றும் நடக்காது என்றும் அவர் கூறினார். (கி-சு-கே)

இப்பத்திரிகை, "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மே மாதம் 06-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office, Colombo under licence Number B/10886/B